முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1353

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

13.06.2023, செவ்வாய்கிழமை

1. ஞானபலம் கொண்ட அரங்கனே
ஞானவான்கள் துணைகொண்ட தேசிகனே
வானவர்கள் போற்றுகின்ற அரங்கனே
வள்ளலாக வாழுகின்ற குருராஜனே
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு
அருளுவேன் சுப்ரமணியர் யானும்
வரமென ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் வைகாசி மாதம் 30 ம் நாள், 13.06.2023, செவ்வாய்கிழமை)
வள்ளல் நீ வாழுகின்ற கடவுள் நீ
3. கடவுளாக உன்னுள்ளே ஆறுமுகன் யான்
கருணைகொண்டு உன் இயக்கம் காத்துவர
இடரின்றி அரங்கன் நீ வந்த நோக்கம்
இந்த யுகத்தில் அவசியம் நிறைவேறுமப்பா
4. அப்பனே ஞானத்தின் தலைவன் யானும்
ஞானமாக உன்னுள்ளே கனிந்திருக்க
தானாக வந்து உன்பால் சேறுவோர்கள்
தரணியில் தவசியாக ஞானியாக மாறுவர்
5. மாறுதலை அரங்கன் உன் தீட்சைவழி
மகான் சுப்ரமணியர் யானும் நடத்தி வைப்பேன்
ஆறுதலாய் உன் தர்மத்தில் பொருளுதவி
அனுதினம் வழங்கி ஆசி பெறுபவரெல்லாம்
6. பெறுவோர்க்கு தர்மவான் என்கின்ற பட்டமோடு
பிறவிப் பிணி அகற்றி இனிதே யான்
துறவி உன் வழி பேராற்றலை
தீட்சையாக ஆசியாக தந்து அருள்புரிவேன்
7. அருளவே உன்னாசி பெறுபவரெல்லாம்
அகிலத்தில் ஞானியாக மாற்றம் கண்டு
பெருமைபட வாசியோகம் சகல சித்தி
பிசகின்றி சூட்சுமங்கள் பல அறிந்து

8. அறிந்துமே ஞானியாவர் உறுதியப்பா அரங்கனுள் அவரவரும் அடக்கமாகி
ஆற்றல்பட கலியுகத்தில் அரங்கன் தேடும் அனைத்து சித்திகொண்டதொரு ஞானிகளாக

மாற்றம் கண்டு இந்த யுகமே
மகான் அரங்கனால் பேரற்புதம் அடையக்கூடும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–